**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Natural Environment in the Worship of the Lord

**M. Balamurugan,** Research Scholar, Tamil Research Centre,
Alagappa Goverment Arts College, Karaikudi-3, Tamil Nadu, India.
**Dr K. Amudha,** Assistant Professor, Tamil Research Centre,
Alagappa Goverment Arts College, Karaikudi-3, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-3024-4957**
**DOI: 10.5281/zenodo.6622263**

## Abstract

*Maraithiru Thani Nayaga Adigal is the one who aptly said that Tamil is a devotional language. The Shaiva and Vaishnava worshipers worshiped the Gods as in the form of nature. The omniscient God is in the form of nature is a part of worship in the Shaiva and Vaishnava sects. Many Tamil poets sang hymns to Lord Shiva and Lord Vishnu in an enthralling manner. Thay see the Lord in all natural forms and glorify in their hymns. The purpose of this article is to delineate the nature of such worshipers in the worship of the Lord through the literary sources.*

**Keywords:** Devotional Literature, Worship, Worshipers, Landscapes, Songs, Devotees.

## References

[1] Sarangapani.R, *Paripadal.* Kovilur Monastery, Kovilur, 2003.
[2] Subramanian S.W. *Tolkappiyam Thelivurai.* Manivasakkar Publishing House, Chennai, 2006.
[3] Tamilannal. *Tolkappiyam*. Sellappa Publishing, Madurai, 2021.
[4] Murali J.C, *Panniruthirumarai Moolamum Uraiyum*. Chatura Publishing, Chennai.
[5] www.tamilvedham.org

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# இறைவனின் வழிபாட்டில் இயற்கைச்சூழல்

**மு.பாலமுருகன்,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம், அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி-3, தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர் க. அமுதா,** உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி-3, தமிழ்நாடு, இந்தியா.

ORCiD: https://orcid.org/0000-0003-3024-4957
**DOI: 10.5281/zenodo.6622263**

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழைப் பக்திமொழி என்று பெரிதும் பொருத்தமாக கூறியவர் மறைத்திரு தனிநாயக அடிகள். சைவ வைணவ அடியார்கள் இறையுணர்வை இயற்கையின் வடிவமாகக் கொண்டு வழிபட்டனர். இறைவழிபாட்டில் இயற்கை ஒரு பகுதியாகும். அனைத்துமான இறைவன் இயற்கையின் வடிவில் உயிர் வாழ்கின்றான். இயற்கை வளங்களில் இறைவனைக் கண்டு நாளும் இன்னிசையால் பாடல்கள் பல புனைந்தவர்கள் இறையடியார்கள். இத்தகைய இறையடியார்கள் இறைவனின் வழிபாட்டில் இயற்கைச்சூழலைப் பதிபித்தமையை காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**திறவுச்சொற்கள்:** பக்தி இலக்கியம், வழிபாடுகள், இறையடியார்கள், இயற்கைச்சூழல்கள், பாடல்கள், பக்தர்கள்

**முன்னுரை**

இறைவனின் படைப்பில் அழகானதும் அரியதொன்றாகவும் விளங்குவது இயற்கையாகும். இயற்கையானது அனைத்து உயிரினங்களையும் கட்டுப்படுத்தும் ஒரு கட்டுப்பாடற்ற மிகவும் சக்திவாய்ந்த அமைப்புகளாகும். இவ்வமைப்பு உயிரினச் சூழலை உருவாக்குகிறது. சுற்றுச்சூழலையும் அதன் மண்டலங்களையும் பல்வேறு வகைகளாக பிரித்தறிந்தாலும் அவை யாவும் இயற்கையின் கட்டுப்பாட்டிலேயே அமைகின்றன. இத்தகைய இயற்கையே உலகம். உலகமே இறைவன். இவ்வாறு இந்த உலகத்தை இறைவனாகக் கருதி உலகை நானிலம் எனப் பகுத்து அவற்றோடு தொடர்புடைய தாவரம், விலங்கு, பறவை மற்றும் இயற்கை காரணிகள் ஆகியவற்றை ஒன்றாக சேர்த்து நான்கு வகையான நிலவியல் பாகுபாட்டினை வகுத்தனர். நிலவியல் அமைப்பு கருக்கொண்ட இயற்கையே இறைவனாகத் திகழ்கின்றான் என்பதை ஆராயும் நோக்கில் இப்பொருண்மை அமையப் பெறுகின்றது.

**இறை வழிபாட்டில் இயற்கை**

இறைவழிபாட்டினை உருவ வழிபாடு, அருவுருவ வழிபாடு, அருவ வழிபாடு, ஆலய வழிபாடு, கேட்டல் வழிபாடு, பாடுதல் வழிபாடு, நினைத்தல் வழிபாடு, அடி தொழுதல் வழிபாடு, பூசித்தல் வழிபாடு, அன்பு வழிபாடு, ஒப்படைத்தல் வழிபாடு, வணங்குதல் வழிபாடு, தொண்டு வழிபாடு எனவழிபாட்டின் முறையினைக் கூறிக்கொண்டே செல்லலாம். இறைவன் படைப்பில் ஆற்றல் பெற்றதும், மனதைஅதன்பால் ஈர்க்கும் சக்தி படைத்ததும் இயற்கையாகும். இயற்கை இயல்பாக அமைவது, இயல்பாகச் செயற்படுவதாகும். பொதுவாக ஐம்பூதங்களும், அவற்றின் சேர்க்கையான உலகமும் இயற்கை எனலாம். இவற்றின் ஆக்கத்தினை சங்ககாலப் புலவர்கள் மிகுதியாக வெளிப்படுத்தியுள்ளனர்.சங்க இலக்கியங்களைப் போன்றே பக்தி இலக்கியங்களிலும் இயற்கை

புனைவுகள் மிகுதியாக காணப்படுகின்றன. திருக்கற்குடி மலையின் உயர்ந்த தோற்றத்தையும், அங்கு வாழும் குறிஞ்சி நில மக்களாகிய குறமாதர்கள் கையில் வளரும் இளஞ்சிறார்களின் குழந்தையுள்ளத்தையும் கண்டு மகிழ்ந்த திருஞானசம்பந்தர் தாம் கண்ட காட்சியை,

**சங்கம தார்குற மாதர் தங்கையின் மைந்தர்கள் தாவிக்**
**மாமதி பற்றுங் கற்குடி மாமலை யாரே (திருஞானசம்பந்தர், 1:43:2)**

என்ற பாடல் வழி எடுத்துரைக்கின்றார்.

**அனைத்துமானவன் இறைவன்**

இயற்கையே இறைவன் என்பதைப் பல இடங்களில் திருஞானசம்பந்தர் புலப்படுத்துகின்றார். பொருள் அணிகளுள் ஒன்றான எண்ணணியை இறைவனுடன் பொருத்திக்காட்டும் மாண்பு போற்றுதற்குரியது. இதனை,

**ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணான் குணமூன்றாய்**
**மாறாமறை நான்காய்வரும் பூதம் மனாவயைந்தாய்**
**ஆறார்சுவை யேழோசையொடெட்டுத்திசை தானாய்**
**வேறாயுட னானானிடம் வீழிம் மிழலையே (திருவீழிமிழலை- 1:11:2)**

என வரும் பாடல் அனைத்தையும் ஒடுக்குவோனாய், ஒடுங்கிய உடலைத் தானொருவனே முதற்பொருளாய் நின்று தோற்றுவிப்பவனாய், முக்குணவடிவினனாய், எக்காலத்தும் மாறுபடாத நான்மறை வடிவினனாய் ஐம்பெரும் பூதங்கள், அறுசுவை, எழுஓசை, எண்திசை ஆகியவற்றில் நிறைந்தவனாய், உயிரோடு ஒன்றாகியும், வேறாகியும், உடனாகியும் விளங்குபவன் இறைவன் என்று குறிப்பிடுகின்றார். 'மக்கள் தாமே ஆறறிவுயிரே'என்னும் தொல்காப்பியத்திற்கு இணங்க மக்கள் எனப்படுவோர் நலம் தீங்கினைப் பகுத்தறியும் பேராற்றல் படைத்தவர்களாவர். அவர்கள் வாழ்வில் பட்டுணர்ந்தனவற்றை இலக்கியமெனக் கொண்டனர்.

**நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
**மறைமொழி தானே மந்திரம் என்ப (தொல்- பொருள்-செய்யுள். நூ1434)**

என்கிறது தொல்காப்பியம். மறைமொழி எனக் கொண்ட மந்திரங்கள் சமயங்கள் தோறும் நிலவலாயின. இயற்கையோடு இயைந்த வாழ்வியல் கூறுகளை இலக்கியங்கள் இயம்பிச் சென்றன.சமய வேதங்களும் இயற்கையை விட்டு வைக்கவில்லை என்றே கூறலாம்.

**இயற்கை வளங்கள்**

சேக்கிழார், 63 நாயன்மார் புராணங்களில் சில பாடல்களில் அவ்வூரின் இயற்கை வளத்தை வடித்துக் காட்டுகிறார். உதாரணமாக திருநீலநக்கரின் - சாத்தியங்களை, காரைக்காலம்மையாரின் - காரைக்கால், திருநாவுக்கரசரின் - திருமுனைப்பாடி நாடு, மூர்த்தி நாயனாரின் - பாண்டிநாட்டு வளம் எனப் பெரும்பாலும் ஊர்வளத்தை இயற்கை வளம் பொருந்த, அந்தந்த அடியார்களின் குணம், குலம் பிறப்பை ஒட்டி கூறுவது மரபாகும். கழுமல மூதூரில் அவ்வாறே அந்தணர் பிறப்பையொட்டி ஆகம அளவைக்கேற்ப தரப்பட்டுள்ளது. கீழ்வரும் பாடலும் இதனை உறுதிப்படுத்துகின்றது.

**காமர்திருப் பதியதன்கண் வேதியர்போற் கடிகமழும்**
**தாமரையும் புல்லிதழும் தயங்கியநூலுந்தாங்கி (பெரியபுராணம்- திருஞானசம்பந்தர்-28:1:9)**

வண்டுகள் மகரந்தமாகிய நீற்றை அணிந்து சாமகீதம் இசைக்கின்றனவாம்.மரம், வண்டு, மக்கள் மூவரும் இந்நிலை பெற்று வாழ்ந்தமையை கூறப்படுகிறது. தாமரையின் நீரும் அந்தணர்கள் பக்தியில்

கண்ணீரும் கொண்டு விளங்குவதனை நான்மறையினர் செயலினைத் தாமரையில் வைத்து தருகின்றார் என்பதை உணரமுடிகிறது.

மேகமானது கடல் நீரைச் சுமந்து கொண்டு கருமை வண்ணத்துடன் காட்சியளிப்பதை, **"காரிடந் தில்லை தன்னுட் கருதுசிற் றம்பலத்தே" (திருநாவுக்கரசர்- திருவதிகைவீரட்டானம் 4:22:6)** என்கிறார். தூய மாமலை நின்ற- நிரையோடும் என்றும் கூறுகிறார் திருஞானசம்பந்தர்.

விழா நிகழ்ச்சிகளை முன்னதாக அறிவித்தெழும் முழவின் ஓசை இடையறாது கேட்பதும், பழமையான மலைப்பாறைகளுக்கு இடையே அந்தக்காலத்துப்பிறை வந்து அணைவதுமாகிய திருவண்ணாமலையில் விளங்கும் இறைவன். அடியவர்களின் வினைகளைப் போக்குவதோடு அவர்களைப் பற்றியுள்ள பாவங்களையும் தீர்க்கின்ற உறைவிடமாக உள்ளது என்கிறார். இதனை,

**வந்தித்து இருக்கும் அடியார் தங்கள் வருமேல் வினையோடு**
**பந்தித்து இருந்த பாவந்தீர்க்கும் பரமன் உறைகோயில்**
**முந்திஎழுந்த முழவின்ஓசை முதுகல் வரைகள்மேல்**
**அந்திப் பிறைவந்து அணையும்சாரல் அண்ணாமலையாரே (திருஞானசம்பந்தர் - திரு 1:69:7)**

என வரும் திருஞானசம்பந்தர் பெருமான் இயற்றிய திருவண்ணாமலை பதிகப்பாடல் விளக்குகிறது.

**இலக்கியங்களில் இயற்கை**

இறைவன் படைப்புகளில் இயற்கையை எவ்வாறு கூற வேண்டும் என்று தொல்காப்பியர் உரைக்கின்றார். இதனை, "இயற்கைப் பொருளை இன்று எனக்கிளத்தல்" -தொல்-சொல்-நூ.502.ப-192. நூற்பா வழி அறியலாம். ஐம்பூதங்கள், தாவரங்கள், பறவைகள், விலங்கினங்கள் மற்றும் ஆறு, மலை, கடல், அருவி, நிலம், பொழுது போன்றன இயற்கைப் பொருட்களாகும். பழந்தமிழர் வாழ்விற்கு இலக்கணம் வகுத்துள்ளார் தொல்காப்பியர். இதனை,

**முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலுங்காலை முறைசிறந் தனவே**
**பாடலுள் பயின்றவை நாடும் காலை (தொல்-பொருள்- நூ-949.ப-354)**

நூற்பா வழி கண்டுணரலாம். தமிழ் இலக்கியங்களில் இயற்கைதலைமையிடம் பெற்றுத் திகழ்கிறது. இயற்கையையே இறைவனாகக் கண்ட தமிழன் இறைமை உணர்வுடன் தம் படைப்புகளைப் படைத்துள்ளான். உத்திகளைப் பின்புலமாகக் கொண்டு உருவாக்கியுள்ளான். இயற்கை எழிலை பாடுபொருளாகவே வைத்து படைப்பாளர்கள் அமைத்துள்ளார்கள். இயற்கை வாயிலாக பலச் செய்திகள் அறிவியல் உலகிற்கும், கலை உலகிற்கும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு வழிகாட்டிகளாக, செய்தி நிறுவனங்களாக இயற்கை, இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது.

இயற்கையினுள் இறைவன் இயைந்து இருப்பதை பரிபாடல் நூல் சான்று பகர்கின்றது.

**தீயினுள் தெறல் நீ! பூவினுள் நாற்றம் நீ!**
**கல்லினுள் மணியும் நீ! சொல்லினுள் வாய்மை நீ!**
**அறத்தினுள் அன்பு நீ! மறத்தினுள் மைந்தன் நீ!**
**வேதத்து மறை நீ! பூதத்து முதலும் நீ!**
**வெஞ்சுடர் ஒளியும் நீ! திங்களுள் அளியும் நீ!**
**அனைத்தும் நீ! அனைத்தினுள்பொருளும் நீ (பரிபாடல் 3:63-68)**
**…நின், வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள**

**நின், தண்மையும் சாயலும் திங்களுள**

**நின், சுரத்தலும் வெண்மையும் மாரியும் (பரிபாடல் 4:25-27)**

எல்லாப் பொருளும் இறைவனே என்று எடுத்தாளப்பட்டுள்ளது. பக்தி நெறியில் ஒன்றிய திருநாவுக்கரசரும், பெரியாழ்வாரும் எப்பொழுதும் இறைவனைப் பற்றிய சிந்தனையுடையவராய் விளங்கியமையால் தாங்கள் காணும் இயற்கைப் பொருள்களையும் இறைவனது திருவுருவாகவும்,அவனது திருச்செயலாகவும் எண்ணிப் பாடியுள்ளனர்.

**மாசில் வீணையும் மாலை மதியமும்**

**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**

**மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே**

**ஈசன் எந்தை இணையடி நீழலே (திருநாவுக்கரசர் 5:90:1)**

என்று திருநாவுக்கரசர் பக்தி பரவசத்துடன் இறைவனடி நிழலாக மதி, தென்றல், வேனில், பொய்கை போன்ற இயற்கைப் பொருளாகப் பாவித்துப் பாடியுள்ளார்.

**திருமுகமாய்ச் செங்கல்கள்**

**திருநிறமாய்க் கருங்குவளை**

**பொருமுகமாய் நின்றலரும்**

**புனலரங்கம் என்பதுவே (பெரியாழ்வார் - நான்காம்பத்து- திருமொழி 8.பா.3)**

என்பது பெரியாழ்வார் பாடல். இயற்கையில் இறைவனைக் காண்பதன் வாயிலாக பக்தி அனுபவத்தில் ஒன்றுபட்டுள்ளனர்.

**முடிவுரை**

மனித வாழ்க்கை என்பது இயற்கையோடு தொடர்புடையது. எனவே மனிதன் தன்னைச் சூழ்ந்துள்ள இயற்கைப் பொருள்களைப் பற்றி சிந்திக்கிறான். இச்சிந்தனையின் விளைவாக இலக்கியங்கள் வெளிப்படுகின்றன. இலக்கண இலக்கியங்களில் இயற்கைப் பொருள்கள் இறைவனுக்கு உவமைகளாகவும்,இறைவனை இயற்கைக்கு உவமையாகவும் கூறும் போக்குக் காணப்படுகின்றது. பக்திக்காலத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் இயற்கை முழுவதையுமே இறைவனாக கண்டனர். இறைவழிபாட்டில் இயற்கைச்சூழலே அமைகின்றது என்பதை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

[1] சாரங்கபாணி.இரா, *பரிபாடல்*. கோவிலூர் மடாலயம், கோவிலூர், 2003.

[2] சுப்பிரமணியன் ச.வே, *தொல்காப்பியம் தெளிவுரை*. மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2006.

[3] தமிழண்ணல், *தொல்காப்பியம்*. செல்லப்பா பதிப்பகம், மதுரை, 2021.

[4] முரளி ஜீ.ச. *பன்னிரு திருமுறை மூலமும் உரையும்*. சதுரா பதிப்பகம், சென்னை.

[5] www.tamilvedham.org

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.